ஊர்கூடி தேரிழுப்போம்...

# நாங்கள்

அல்வாய் - மனோகரா

இதழ் 16

வைகாசி 1 – 31

2022

பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்
இணைஆசிரியர்கள்
வெ. துஷ்யந்தன்
செ. கணேசன்

அல்வாய் மனோகராக் கிராம ஆவணப்படுத்தல் மாதாந்த பத்திரிகை 30/-

நாங்கள் வாசகர்களுக்கு வணக்கம்

நாம் அனைவரும் ஒரு இக்கட்டான சூழலுக்குள் அகப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம். நமது ஒழுக்க விழுமியங்களை நாங்கள் தான் பேண வேண்டும். எங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளை பெற்றோர்கள் தான் முக்கிய கவனமெடுத்து கண்காணிக்க வேண்டும். அண்மைக்காலமாக எமது கிராமத்துள் போதை கொடுக்கும் மதுவின் வரவு அதிகமாக உள்ளது. முன்னைய காலத்தில் எப்போதாவது ஒரு நாளில், ஒரு கொண்டாட்டத்தை முன்னிறுத்தி நடைபெறும் இந்த மது அருந்தல் நிகழ்வானது, இன்று தினந்தோறும் நடைபெற்று வருகின்றது. வீட்டில் வறுமை நிலை காணப்படுகின்ற போதும் அவர்கள் பிள்ளைகள் தொடர்ச்சியாக உயர் வகையான மது பானங்களை தினமும் அருந்தி போதையேற்றி வருகின்றார்கள். பலர் இந்த போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி வருவதுடன் நல்ல நிலையில் உள்ள பலரையும் இந்த கெட்ட பழக்கத்துக்கு இழுத்துச் செல்கின்றார்கள். மதிப்பு மிகுந்த ஆசிரியர்கள், நல்ல அரசாங்க, தனியார் உத்தியோகங்களில் இருப்பவர்கள் கூட தொடர்ச்சியான குடி வெறியில் காணப்படுகின்றார்கள். மது என்பது எம்மையும் அழித்து நமது குடும்பத்தையும் அழித்து நமது சந்ததியையும் அழிக்கக் கூடியது. அமைதியான ஒழுக்கமான எமது கிராமத்துள் எவ்வாறு இந்த கெட்டபழக்கம் ஊடுருவியது??? இதை வளர விட்டது யார்? போன்ற வினாக்கள் நம் அனைவரிடையேயும் காணப்படும் வினாவாக உள்ளது. வேறு யாருமல்ல, பெற்றோர்களாகிய நாம் பிள்ளைகள் மீது சரியான பொறுப்புக் கொள்ளாமையும், சமூக நிறு வனங்கள் தமது நிலப்பரப்பை சரியான ஆட்சிக்கு உட்படுத்தாமை யும், சில ஒழுங்கைகளுக்கும் சில காணிக் களுக்கும் சொந்த முடைய சொந்தக்காரர் இவ்வாறான நிகழ்வுகள் அரங்கேறுவதற்கு தமது நிலப்பரப்பை பயன் படுத்துபவர்களை கேள்வி கேட்காததுமே பெரியதொரு காரணியாக அமைகின்றது. வெளியில் சென்ற மகன் வீட்டுக்கு குறித்த நேரத்திற்கு வரவேண்டும் என்ற கட்டுப்பாடு, கணவன் வெளியில் சென்று போதையுடன் வருகின்றார் என்றால் மனைவி சரியான வகிபாகம் எடுத்து இது தொடர்பாக விசாரித்து மாமன் –மாமியுடன் கூடிக் கதைத்து இதுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். “இப்ப யார் தான் குடிக்கேல்லை... எல்லாரும் குடிக்கினம் தானே” என்று பெருமை பேசும் பெற்றோர்கள் தயவு செய்து உங்கள் பிள்ளைகளை நீங்கள் திருத்துங்கள். ஒவ்வொருவரும் உங்கள் பிள்ளையை நீங்கள் திருத்தினால் அனைவரும் திருந்து வார்கள். சமூக நிறுவனங்கள் சரியான கட்டுப்பாடுகளை விதி யுங்கள், பொதுவிடங்களை இவ்வாறான மதுப்பிரியர்களுக்கு தானமாக வழங்காதீர்கள். நேரம் பொன்னானது, பணம் அருமையானது அதனை சரியான வகையில் பயன் படுத்துங்கள். ஒருவேளை கஞ்சி குடிக்க முடியாமல் நம் இனத்தவர் பலர் அல்லற் படுகிறார்கள். இவ்வாறு செலவிடும் பணத்தை தானம் செய்யுங்கள். எமது வாழ்வு நிரந்தரமற்றது. அடிமட்டத்தில் இருந்து சுய உழைப்பினால் முன்னேறியவர்கள் நாம், கிடைத்த அருமையான வாழ்வை மதுவுக்குள் குழி தோண்டிப் புதைக்காமல் இன்பமான வாழ்வை வாழ்ந்து மடிவோம். தயவு செய்து இந்த தலையங்கத்தையிட்டு மதுப்பிரியர்களே கோபமடை யாதீர்கள். எமது உறவான உங்கள் எவரையும் இழந்து விடக்கூடாது என்ற ஆதங்கமே இந்த ஆசிரியர் தலையங்கம். உங்கள் உறவுகள், மனைவி, பிள்ளைகள், வயதான பெற்றோர்களை நினைத்துப் பாருங்கள் உங்கள் இழப்பை தாங்க முடியாதவர்கள் அவர்கள். நீங்களே உணர்ந்து திருந்துங்கள் அல்லது உளவளத் துணையை நாடுங்கள்.

– க.பரணீதரன்


போதையை ஒழிப்போம் நல்வாழ்வு வாழ்வோம்

## உள்ளே...

அல்வாய் மனோகராக் கிராமத்தின்
முதல் பெண் பட்டதாரியும்
முதல் மாதர் சங்கதத்தலைவியுமான
திருமதி வ.பர்வதாமணி



நகைச்சுவை உணர்வால்
மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிடும்
இயல்பைக் கொண்ட
அமரர் க.இராசையா



காலம் கரைத்த மனப்பதிவுகள் – 04

பவளவிழாக் காணும்
மனோகரா உதைபந்தாட்ட வீரர்
மயில்வாகனம் ஜெயக்கொடி



உழைப்பால் உயர்ந்த மனிதர்
அமரர் பொ. மகாலிங்கம்



எம்மவர்கள் சிறுகதை – 5
“பேதம்” – சி.விமலன்

தொடர்புகளுக்கு:
கலைஅகம்,
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில் வீதி
அல்வாய்.
தொலைபேசி : 0775991949
email - jeevanathy@yahoo.com



# அல்வாய் மனோகராக் கிராமத்தின் முதல் பெண் பட்டதாரியும் முதல் மாதர் சங்கதத்தலைவியுமான திருமதி வ.பர்வதாமணி

■ க.பரணீதரன்

கல்வியால் நிறைந்த ஊர் எனப் பெருமைப்படத்தக்க ஊராக விளங்குவது எமது அல்வாய் மனோ கராக்கிராமம். எமது அல்வாய்க் கிராமம் பல சிறப்புகளைக் கொண்ட கிராமமாக விளங்குவதை நாம் அனைவரும் அறிவோம். எமது கிராமத்தில் ஆண் பெண் சமத்துவம் என்றுமே பேணப்பட்டு வருகின்ற மையும் பெருமைக்கும் போற்று தலுக்கும் உரிய விடயமாக கொள்ளத்தக்கது. கல்வி, நாடகம், நிர்வாகத்திறமை என பல்துறை சார்ந்த ஆற்றல் உடைய பெண்மணி யாக எமது ஊரைச் சேர்ந்த வ. பர்வதாமணி அவர்கள் விளங்கு கின்றார். விருதுகள், சுயபெருமை பேசல், கௌரவிப்புகள் என எதை யும் எதிர்பார்க்காது பல சாதனை களை புரிந்துவிட்டு அமைதியாக இருப்பவர் பர்வதாமணி அவர்கள்.

எமது அல்வாய் மனோக ராக்கிராமத்தின் முதல் பெண் பட்ட தாரியான இவர் *1948.05.11* இல்



சோதிடர் ச.தம்பி ஐயா அவர்களுக்கும் பறுவதம் அவர்களுக்கும் மகளாகப் பிறந்தார். இவருக்கு வரதராஜன், சௌந்தர ராஜன், ரவீந்திரன், ராதாமணி, கலாமணி, கீதாமணி என ஆறு சகோதரங்கள் கிடைக்கப்பெற்ற போதும், குடும்ப நிலைமை, மருத் துவ வசதிகள் இன்மை காரணமாக இளம் வயதிலேயே வரதராஜன், சௌந்தராஜன், ரவீந்திரன், ராதா மணி ஆகியோரை இழந்தார். யா/தேவரையாளி இந்துக்கல்லூரி யில் தரம் *1-11* வரை கல்வி கற்ற இவர் இரண்டு தடவை Double promotion *(1-3, 3-5)* வகுப்பேற்றம் பெற்று இள வயதிலேயே கல்வியில் சிறந்த ஆற்றல் படைத்தவராக விளங்கினார். ஆ.ம.செல்லத்துரை, பெ.அண்ணாச்சாமி, அமிர்தலிங்கம், சி.திரவியம், க.ஆழ்வாப்பிள்ளை, க.மகாலிங்கம், சைவப்புலவர் சி.வல்லிபுரம், ச.சிவகுரு, போல் மாஸ்ரர் போன்றோரிடம் தேவரையாளியில் கல்வியைப் பெற்றுக் கொண்டார். பாடசாலைக் காலத்தில் த.செல்வராஜா, மு.வேதாரணியம், ஆ.மஇசெல்லத்துரை போன்ற ஆசிரியர்கள் இயக்கிய நாடகங்களில் இவர் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்தார். சிறந்த குரல் வளமுடன், வசனங்களை தெளிவாகவும் அறுத்துறுத்தும் பேசும் தன்மை காரணமாக ஆசிரியர்களால் இவருக்கு பிரதான பாத்திரம் அளிக்கப்பட்டது. பாடசாலைகளுக்கிடையே நடை பெற்ற நாடகப்போட்டியில் வேதாரணியம் ஆசிரியரால் இயக்கப்பட்ட "புதுமைப்பெண்" நாடகம் வெற்றி பெற்றது. அந்நாடகத்தில் நடித்தமைக்காக சிறந்த நடிகைக்கான விருதை பர்வதாமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். க.பொ.த.சாதாரணதரப்பரீட்சையில் திறமைச்சித்தி பெற்றுக் கொண்டவர் தேவைரையாளி இந்துக்கல்லூரியில் உயர்தர வகுப்பு இல்லாத காரணத்தால் யா/பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் பெண்கள் கல்லூரியில் உயர்தரக் கல்வியைப் பெற்றுக் கொண்டார். கலைப்பிரிவில் கல்வி கற்ற இவர் முதற் தரத்திலேயே பல்லைக்கழகத்துக்கு தெரிவானார். முதல் வருடத்தை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் *2* ஆம் *3* ஆம் வருடங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பூர்த்தி செய்து B.A(Hon) 2nd upper பட்டம் பெற்றுக் கொண்டார். தமிழ் பாடத்தை *250* மாணவர்கள் தெரிவு செய்து படித்த பேராதனைப்பல்கலைக்கழகத்தில் தமிழ் பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றமைக்காக சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாப கார்த்த விருதைப் பெற்றார். பல்லைக்கழக காலத்தில் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்ற கலை இலக்கிய நிகழ்வுகளில் கலந்து கொண்டு பல விருதுகளைப் பெற்றுக் கொண்டார்.

*22* வயதில் பல்லைக்கழகக் கல்வியை பூர்த்தி செய்து வெளியேறியவர் *6* வருட காலமாக உத்தியோகம் இன்றி இருந்தார். *28* ஆவது வயதில் திட்டமிடல் அமைச்சின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி கிடைத்து கரவெட்டி பிரதேச செயலகத்திலும், பருத்தித்துறை பிரதேச செயலகத்திலும் *8* வருடங்கள் பணியாற்றினார். பின்னர் முல்லைத்தீவு கச்சேரியிலும், துணுக்காய் பிரதேச செயலகத்திலும் *5* வருடங்கள் பணியாற்றினார். அதன் பின்னர் திருகோணமலைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று அங்கு *9* வருடகாலம் பணியாற்றி கொழும்பு திட்டமிடல் அமைச்சின் கீழ் திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் என்னும் பதவியை கொழும்பில் பெற்று அங்கு பணிபுரிந்து அப்பதவியில் இருந்து உயர்வு

பெற்று திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் பதவியைப் பெற்று, அங்கு சேவையாற்றி தனது 56 ஆவது வயதில் ஓய்வு பெற்றுக் கொண்டார்.

1977 ஆம் ஆண்டு பெற்றோர் சம்மதத்துடன் அல்வாய் சாணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்தில் காதல் கொண்ட மணாளனைக் கைப் பிடித்தார். இவர்களது இல்லற வாழ்வின் பேறாக இவர்களுக்கு அரவிந்தன் (பொறியியலாளர்), அபிராமி(வழக்கறிஞர்) சிவகாமி(வைத்தியர்) ஆகிய பிள்ளைச் செல்வங்கள் கிடைத்தன.


இவர் ஒரு சிறந்த பட்டிமன்ற பேச்சாளராக விளங்கியவர். ஈழத்தின் தலைசிறந்த பட்டிமன்றப் பேச்சாளர்களுடன் எல்லாம் பட்டிமன்றம் பேசிய பெருமைக்குரியவர். அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையத்தின் முத்தமிழ் விழாவில் "சிலப்பதிகாரம் ஓர் அறநூல், சிலப்பதிகாரம் ஓர் அரசியல் நூல்" என்னும் தலைப்பில் காரை செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் வள்ளிநாயகி குறமகள், கவிஞர் வி.கந்தவனம், கலாநிதி நா.சுப்பிரமணியன், தெணியான் ஆகியோருடன் பேச்சாளராகக் கலந்து சிறப்பித்தார். புத்தூரில் நடைபெற்ற வழக்காடு மன்றம் ஒன்றில் "புராண நாயகர்கள் குற்றவாளிக் கூண்டில்" என்னும் தலைப்பில் காரை செ.சுந்தரம்பிள்ளை நீதிபதியாக இருக்க மீரா, இராஜதுரை, சி.வன்னியகுலம் போன்றோருடன் இவர் வாதிட்டுள்ளார். வதிரி பூவற் கரைப்பிள்ளையார் ஆலயத்தில் "மகாபாரதத்தில் வரும் பாத்திரங்களே முன்னுதாரனமானவை, இல்லை இரா மாயணத்தில் வரும் பாத்திரங்களே முன்னுதாரண மானவை" என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டிமன்றத் திற்கு இவர் தலைமை வகித்தார். சிதம்பரப்பிள்ளை, கலாமணி போன்றோர் இப்பட்டிமன்றத்தில் பேச்சாளர்களாக வாதிட்டார்கள். திருகோணமலையில் பல வழக்காடுமன்றங்கள், பட்டிமன்றங்களில் பேச்சாள ராக கலந்து சிறப்பித்தார்.

பாடசாலைக்காலங்களில் பாடசாலையில் நாடகங்களில் முக்கிய பாத்திரமேற்று அந்நாடகங்களை சிறப்புறச் செய்த இவர், அல்வாய் மனோகராக் கிராமத்தில் இசை நாடகத்திற்காகவே தன்னை அர்ப்பணித்து வாழ்ந்த அண்ணாவியார் ச.தம்பிஐயா அவர்களை தந்தையாக கொண்ட காரணத்தினால் அவரது பல நாடகங்களில் நடித்து புகழ் பெற்றார். அண்ணாச்சாமி அரிச்சந்திரனாகவும் சந்திரமதியாக ச.தம்பிஐயாவும், லோகிதாசனாக பர்வதாமணியும் பல மேடைகளில் நடித்துள்ளார்கள். குறிப்பாக, லோகி தாசனால் பாடப்படும், "கால்சோருது கைசோருது கண்கள் இருளுதம்மா" என்ற பாடலை மிக அற்புதமாக பாடக்கூடியவராக இவர் திகழ்ந்தார். போட்டி நாடகம் ஒன்றில் அண்ணாச்சாமி அரிச்சந்திரனாகவும் சந்திரமதி யாக ச.தம்பிஐயாவும், லோகிதாசனாக பர்வதாமணியும் அரிச்சந்திரனாக வி.வி.வைரமுத்துவும், சந்திரமதியாக இரத்தினமும், லோகிதாசனாக வைரமுத்துவின் மகள் வசந்தாவும் நடித்த ஒரு நாடக மேடையேற்றத்தில் பங்கு பற்றி பலரது பாராட்டையும் பெற்றார். ச.தம்பிஐயா அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்ட சாகுந்தலம் நாடகத்தில் சகுந்தலையாக இவர் வேடமேற்றார். இவருடன் துஷ்யந்தனாக சாரதாவதி விஜயநாதனும், துருவாசக முனிவராக கலாநிதி த.கலாமணியும் பாத்திரமேற்றார்கள். பல நாடகங்களில் நாரதர் பாத்திரமேற்று நடித்துள்ளார். பாடசாலைக்காலத்தில் இராம நாடகத்தில் கைகேயியாக, துருவன் நாடகத்தில் நாரதராக நடித்துள்ளார். இவருடன் தவமலர் துரை ராஜா, சிவமலர் தங்கவேல், சாரதாவதி விஜயநாதன், சந்திரா சிவதாசன், சிவனேஸ்வரி செல்வராசா, மதுரைத்தேவி ஜெயராஜா போன்ற எமது ஊர் பெண் கலைஞர்கள் சேர்ந்து நடித்துள்ளார்கள். ச.தம்பி ஐயாவால் நெறியாள்கை செய்யப்பட்ட " பாமா விஜயம்" என்ற அற்புதமான நாடகத்தில் இவர் ருக்குமணியாக நடித்துள்ளார். தந்தையாருடன் மல்லாகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் ஆலயம், நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலயம், பரந்தன், வதிரி பூவற்கரைப்பிள்ளையார், வதிரி சீவியான் மைதானம், அல்வாய் வடக்கு போன்ற இடங் களில் நடைபெற்ற நாடகங்களில் பங்குபற்றியுள்ளார். பரந்தனில் இவரது தந்தையாரின் பல நாடகங்கள் நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நடைபெற்றுள்ளன. அங்கு நடைபெற்ற பல நாடகங்களில் இவரும், மு.சே.விவேகானந்தன் அவர்களும் பங்கு பற்றி பலரது பாராட்டையும் பெற்றுள்ளார்கள். 75 இற்கு மேற்பட்ட மேடைகளில் இவர் நடித்துள்ளார். அதில் 15 தடவை லோகிதாசனாக நடித்துள்ளார்.

மனோகரா சனசமூக நிலையமும், கிராம அபிவிருத்தி சங்கமும் சிறப்பாக இயங்கி வந்தகாலத்தில் பெண் நிறுவன அமைமப்பு ஒன்று இல்லை என்ற நிலையில் அக்குறையை போக்க வேண்டும் என எண்ணிய எமதூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு த.இராஜலிங்கம் அவர்கள் பர்வதாமணி அவர்களை அழைத்து ஒரு மாதர் சங்கத்தை அமைக்க வேண்டும் உங்கள் தலைமையில் எனக்கூறி மாதர் சங்கத்தை எமதூரில் ஸ்தாபித்தார். அந்த மாதர்சங்கத்தில் தலைவ ராக பர்வதாமணி அவர்களும், செயலாளராக பாரதி இரத்தினராஜா அவர்களும் பதவி வகித்தார்கள் இவர் களது காலத்தில் பல கலை நிகழ்வுகளை நடாத்தினார் கள். இளையவர்கள் பலரை பழக்கி நாடகங்கள், பேச்சுப் போட்டிகள், பட்டிமன்றங்கள் போன்றவற்றை நடாத் தினார்கள். இவர் எமது ஆலய பஜனை நிகழ்வுகள், கோயில் நிகழ்வுகள் போன்ற வற்றிலும் பங்கு கொண்டு சிறப்பித்தார்.

பல்துறை ஆளுமை நிறைந்த வ.பர்வதாமணி அவர்கள் 74 வயதை அடைந்துள்ள இன்றைய நிலையிலும் பிரசங்கம் செய்யக்கூடியவராகவும், தேவார பதிகங்களை இனிமையாகப் பாடக்கூடிய வல்லமை மிக்கவராக விளங்குகின்றார். முதற் பெண் பட்டதாரி யாகவும், முதல் மாதர்சங்ககத்தலைவியாகவும் விளங்கிய இவர் நாமம் என்றும் எமது கிராமத்தில் நிலைத்து நிற்கும்.

விஜிதன் இந்து தம்பதியினருக்கு 20.05.2022 அன்று விதுன் என்னும் மகன் பிறந்துள்ளார். எமது ஊருக்கு புதியதொரு அங்கத்தவர் இணைந்துள்ளார்.



# நகைச்சுவை உணர்வால் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிடும் இயல்பைக் கொண்ட அமரர் க.இராசையா

■ செல்லக்குட்டி கணேசன்

சுற்றியிருப்போரை நகைச் சுவை உணர்வால் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திவிடும் இயல்பைக் கொண்ட இவர் அறுபத்தைந்து (65) ஆண்டு காலம் இம் மண்ணிலே வாழ்ந்து அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்றவர். தன்னை நேசித்து வந்த, தான் நேசித்த அனைவரினதும் முன் னேற்றத்திற்கும் இடையூறு விளை விக்காது தட்டிக் கொடுத்து தரணியில் அவர்களின் நாமமும் நிலைத்து நிற்க தன்னாலான பங்களிப்பைச் செய்து வந்தார். எந்நேரமும் இவரைச் சுற்றி ஒரு கூட்டம் இருந்து கொண்டே யிருக்கும். இக் கூட்டத்தில் வயது வேறு பாடின்றி சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என பலரும் இணைந்திருப்பர். எவருடனும் பகைமையை வளர்த்துக் கொள்ளாத நல்ல பண்பைக் கொண்ட இவர் அல்வாய் தெற்கு மனோகரா பிச்சந் தோட்டம் குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.கந்தையா நாகமுத்து தம்பதிகளின் கனிஷ்ட புத்திரர் ஆவார். ராசு என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டு வந்த இராசையா அழகான முகப்பொலிவு கொண்டவர். ஐந்தடி நான்கு அங்குல உயரத்தைக் கொண்ட, உருளை வடிவான உடற் கட்டமைப்பைக் கொண்டவர். பார்ப் போரை வசீகரிக்கும் அழகைக் கொண்ட இவரை, இவரது உறவுகள் “எங்கட அழகன்” என்றும் விளித்துக் கூறுவர். திருமதி இரத்தினம் செல்லக்குட்டி, திருமதி. இராசம்மா தங்கவேல், திருமதி பாக்கியம் அரியகுட்டி, செல்லையா (அமரர்), தங்கவேல், பாலகிருஷ்ணன் ஆகியோர் இவரின் உடன் பிறப்புகளாவர்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ்.தேவரையாளிச் சைவ வித்தியாசாலையில் கற்றார். இடை நிலைக் கல்வியோடு தனது கற்றல் செயற்பாட்டிற்கு முற்றுப்புள்ளி இட்டவர். எமது பாரம்பரிய தொழில் முயற்சியில் ஈடுபட முற்பட்ட போது தமையனார் செல்லையாவுக்கு ஏற்பட்ட துன்ப நிகழ்வின் காரணமாக இவரது பாரம்பரிய தொழில் முயற்சியை பெற்றோரும் உடன் பிறப்புக்களும் விரும்பவில்லை. இதனால் மாற்றுத் தொழில் ஒன்றினைத் தேடும் முயற்சியில் இறங்கினார். இதன் பயனாக மைத்துனர், (இரண்டாவது சகோதரியின் கணவர்) மு.தங்கவேல் அவர்களின் வழிகாட்டலில் பாதணி உற்பத்தித் தொழிலை அவரிடம் கற்று சிறந்த பாதணி உற்பத்தியாளராக (சூ மேக்கர்) மிளிர்ந்தார். இவர் இத் தொழிலைக் கற்பதற்கான களம் குருநாகல் நகரப்பகுதியில் பாதணி உற்பத்தி விற்பனை நிலையத்தை நடாத்தி வந்த, வதிரிக் கிராமத்தை சேர்ந்த மூ.சி.கந்தப்பு முதலாளியாரிடம் கிடைக்கப்பெற்றது. சிங்களப் பகுதியில் சில காலம் வாழ்ந்து வந்ததனால் சிங்கள மொழியை ஓர் அளவு அறிந்து வைத்திருக்கக் கூடியவராக இருந்தார். பின்னர் ஊர் வந்து சேர்ந்தவர் வதிரி பாதணி உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் தன்னை ஒரு உற்பத்தியாளராக இணைத்துக் கொண்டார். அப்போது ஆ.ம.வடிவேல் அவர்கள் அந்நிறுவனத் தின் முகாமையாளராக (மனேஜர்) இருந்து, அந்நிறுவனத்தை சிறப்புற நடாத்திவந்தார். பிச்சந்தோட்டம் குறிச்சியில் க.செல்லையாவுக்கு ஏற்பட்ட துயரச் சம்பவத்திற்குப் பின்னர் பாரம்பரிய தொழில் முயற்சியில் இருந்து விலகி அனைவரும் தொழில் மாற்ற முயற்சியில் இறங்கினர். இதற்கு அடித்தளமிட்டவர்



தங்கவேல் ஆவார். இவர் பாதணி உற்பத்தி விற்பன்னர் வரிசையில் இடம் பிடித்துக்கொண்ட ஒருவராவார்.

சிறுவனாக இருந்த போது கிராமிய விளையாட்டுக் களில் தனது திறமைகளை வெளிப்படுத்தியவர் கிட்டியடித்தல், போளை அடித்தல், அம்பெறிதல் போன்ற வற்றில் தனது முழு ஈடுபாட்டையும் வெளிக்காட்டியிருந்தார். குருநாகல் சென்றதும் நகரப்பகுதியில் உள்ள விளையாட்டு மைதானங்களை தனது உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட பயிற்ச்சிக்கு பயன்படுத்தியவர் சிறந்த உதைபந்தாட்ட வீரனாகவும், கரப்பந்தாட்ட வீரனாகவும் மிளிர்ந்தார். இவர் எமது மனோகரா A அணியின் முன்னணி வீரராவார். எமது அணியின் வெற்றிக்கு வித்திட்டவர்களில் இவரது பங்கும் காத்திரமானது.

இது மட்டுமல்லாமல் அல்வாய் மனோகரா சனசமூக நிலைய அனைத்துச் செயற்பாட்டிலும் தன்னை ஒருவராக இணைத்துச் செயற்பட்டவர், மனோகரா சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினராகவும் இருந்து சில உப பதவிகளையும் வகித்துக் கொண்டவர். இது மட்டு மல்லாது எமது சமூக நிறுவனங்கள் அனைத்திலும் இவரது உறுப்புரிமை பேணப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

இவ்வாறு காலவோட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்பட்டவர் திருமண வயதை எட்டியபோது அல்வாய் தெற்கு மயிலிட்டி குறிச்சியில் வாழ்ந்து வந்தவர்களான அமரர்கள் திரு.திருமதி.தம்பு செல்லம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி தவமணி தேவியை பெரியோர்களின் முன்னிலையில் 1961ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24ம் திகதி கரம்பற்றிக் கொண்டார். இவர்களின் இல்லற வாழ்வின் பயனாக இதயதேவி, ஜெயதேவி, சிவதேவி, ஜீவதேவி ஆகிய நான்கு பெண் பிள்ளைகளையும் ஐங்கரன் என்ற ஆண்மகனையும் பெற்றெடுத்தனர்.

19970 இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் திருமதி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவை பிரதமர் பதவியில் அமர்த்தியது. இதனால் அவர்களுடன் கூட்டுச் சேர்ந்த N.M பெரேராவுக்கு அமைச்சுப் பதவி கிடைத்தது. இதனால் மரவரி முறை ஒழிக்கப்பட்டு கூட்டுறவு முறை ஏற்படுத்தப்பட்டது. இதனை சிந்தித்து செயற்படுத்தியவர் இரட்டைக் கலாநிதி என அழைக்கப்பட்டுவந்த அமைச்சர் N.M பெரேரா ஆவார். இதனால் நாடெங்கிலும் பனை தென்னை வள உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் இயங்க ஆரம்பித்தன. இதன் போது கட்டைவேலி, உடுப்பிட்டி பனைதென்னை வள உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு சிற்றூழியராக இணைந்து பணியாற்றினார். தனது முயற்சியினாலும் திறமையினாலும் படிப்படியாக முன்னேறி சங்க மேற்பார்வையாளராக பதவி உயர்வு பெற்றார். இவரை சங்க உறுப்பினர்கள் அனைவரும் “சுப்பவைஸர் இராசையா” என்றே அழைத்து வந்தனர்.

புதிதாக அறிமுகமாகிய கூட்டுறவு முறைமையால் கிடைக்கப் பெற்ற வேலைவாய்ப்பைப்பெற்று தான் சார்ந்த சமூக நலனுக்காகவும் அச் செயற்பாட்டின் மூலமாக தேசநலனுக்காகவும் பாடுபட்டவர். கால்நூற்றாண்டிற்கு மேலாக பனை தென்னை வள உற்பத்தி கூட்டுறவுச் சங்கத்தில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவரை சிலர் கண்ணாடி இராசையா என்று அழைத்து வந்தனர்.

எமது சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலய ஆரம்பகால 7ம் திருவிழா உபயகாரரில் ஒருவராகவிருந்த இவரது தந்தையார் சி.கந்தையாவை அடியொற்றி இவரும் 7ம் திருவிழா உபயகாரரில் ஒருவராகவிருந்து தன்னாலான பங்களிப்பை ஆலயத்திற்குச் செய்து வந்தார். இவ் உபயங்கள் அனைத்தும் துடக்கு வழி (ஆண் சந்ததி) சார்ந்து பங்கிடப்பட்டதால் அதில் இவர்களின் பங்கும் இணைந்திருந்தது. பின் வந்த காலத்தில் இவ்வழி முறைகள் மாற்றப்பட்டு திருவிழாக்கள் பங்கிடப்பட்டபோது (ஆண்டு சரியாக தெரியவில்லை) தான் திருமணம் முடித்த குறிச்சியைச் சேர்ந்த மயிலிட்டி பகுதியாருடன் இணைந்து 5ம் திருவிழா உபயகாரராகி ஆலயத்தில் ஓர் உறுப்பினராக இணைந்து கொண்டு தனது பங்களிப்பை வழங்கியிருந்தார்.

வாழ்நாள் முழுவதும் இயங்கிக் கொண்டிருந்தவர் ஓய்வின் பின்னரும் பாதணி உற்பத்தி தொழிலை பகுதி நேரமாகச் செய்து தனது குடும்ப வருமானத்தை உயர்த்த பாடுபட்டார்.

எதிர்பாராத விதாக அவரை பீடித்திருந்த நோயானது படிப்படியாக முற்றி 2003ம் ஆண்டு தை மாதம் 19ம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலையில் காலமானார். இவரின் நினைவோடு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மக்கள் கூட்டம் இன்னும் இவரை நினைவு படுத்திக் கொண்டேயிருக்கிறது என்பது மனதிற்கு திருப்தியை தருகிறது.

**ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைப் பொட்டியில் சித்தியெய்தி எமது ஊருக்குப் பெருமை சேர்த்த மேலும் ஒரு மாணவன்**



இந்திரலிங்கம் நந்தகீர்த்தன்

157 புள்ளிகள்

# காலம் கரைந்த மனப்பதிவுகள் - 4

கலாநிதி த.கலாமணி

1962 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். நான் அப்போது ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். பாடசாலையிலிருந்து வீடு வந்து சேர்ந்தபோது, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையிலிருந்து ஒரு மாணவன் சீட்டொன்றை எனது தந்தையிடம் கொடுத்துச் சென்றான். கவிஞர்மு.செல்லையா அவர்களிடமிருந்து வந்த சீட்டு அது. நறுக்கான வாசகம். "பாட இருந்த சந்திரா கிணற்றில் விழுந்தமையால் பாடுவதற்கு மகனை அனுப்பி வைக்க வும்". ஐயாவுக்கு (என் தந்தைக்கு) அது முற்றாக விளங்க வில்லை. அந்நாட்களில் இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மேடைகளில், கரவெட்டியைச் சேர்ந்த மு.சிவசிதம்பரம் அவர்களை ஆதரித்து கவிஞர் செல்வையா அவர்களின் பாடல்கள் பாட்பட்டு வந்தமையை ஐயா அறிவார். அப்பாடல்களை சகோதரி சந்திரா தான் (சந்திரா சிவதாசன்) பாடி வந்தாள். சந்திராவுக்கு நல்ல இனிய குரல்வளம் இருந்தது. அதனால் அவள் பாடும்போது கேட்போர் அனைவரையும் பிணித்து வைத்திருப்பாள். கவிஞர் செல்லையா அவர்கள் "உடுப்பிட்டி சிவா" மு.சிவசிதம்பரம் அவர்களினதும் காங்கிரஸ் கட்சியினதும் தீவிர ஆதரவாளர். "சைக்கிளுக்கு "வோட்டுப்" போடாத கை உலக்கை" என்று பாடியவர் கவிஞர் மு.செ.

அப்போது தேர்தல் "சீஸன்" இல்லாதபடியால் எங்கு பாடுவது என்று ஐயாவுக்கு விளங்கவில்லை. அதனால், "சாப்பிட்டு விட்டு ஒருமுறை அவர் வீட்டுக்குப்போய் விபரம் அறிந்து வா" என்று என்னை அனுப்பி வைத்தார். கவிஞர் மீது அப்போதிருந்தே எனக்கு ஒரு பயபக்தி. தயங்கிவாறே அவர் வீட்டுக்குச் சென்றேன். என்னைக் கண்டதும் "வா" என்று அழைத்து ஒரு கதிரையில் இருக்கச் சொன்னார். நான் நின்றுகொண்டே இருந்தேன். அன்றிரவு ஏழு மணிக்கு பருத்தித்துறையில் ஒரு பாடசாலையில் சுகாதார வாரக் கொண்டாட்டம் இருப்பதாகவும் சந்திரா அந்த விழாவில் பாடுவதற்கு இருந்ததாகவும் அவள் தவறிக் கிணற்றில் வீழ்ந்தமையால் என்னைப்பாடுமாறும் கேட்டுக் கொண்டார். பாடல்கள் அச்சடித்த ஒரு தாளைக் கொண்டு வந்து காட்டி பாடலைச் சொல்லித்தந்தார். தானே இராகத் துடன் சில பாடல்களைப் பாடிக்காட்டி, எல்லாம் ஒரே மெட்டில் அமைந்த பாடல்கள் தான் என்பதனால் பாடுவதற்கு சிரமமாக இருக்காது என்றும் சொன்னார். ஒரு பத்துநிமிடம் அதில் கழிந்திருக்கும். "இரவு ஆறரை மணிக்கே உன் ஐயாவோடு பள்ளிக்கூடத்துக்கு வந்து சேர்" என்று சொன்னார்.

அந்தப் பள்ளிக்கூடம் எது என்பது இப்போது ஞாபகத்தில் இல்லை. ஆனால் புலோலியிலுள்ள ஒரு பாடசாலை என்பது மாத்திரம் நினைவுக்கு வருகிறது. அக்காலத்தில், சுகாதாரப் பழக்கவழக்கங்களை மக்களிடம் ஏற்படுத்துவதற்காகவும் தொற்றுநோய்கள் பற்றி விழிப்புணர் வினை ஏற்படுத்துவதற்காகவும் ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிராமந்தோறும் சுகாதாரவாரக் கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்து சுகாதாரப்பிரிவினர் விழாக்களாக நடத்தி வந்தார்கள். இவ்விழாக்களில் தான் சந்திரா கவிஞர் செல்லையா எழுதிய கயரோகப்பாடல்களைப் பாடிவந்தாள்.

புலோலிப் பாடசாலையில் நடைபெற்ற சுகாதார விழா மேடையில் சிறிது பயத்துடன் தான் கவிஞரின் பாடல் களைப் பாடினேன். ஆனால், எல்லோருக்கும் நன்றாகப் பிடித்திருந்தது. மேலும், இரண்டு அல்லது மூன்று கிராமப் பாடசாலைகளில் நடைபெற்ற விழாக்களுக்கு கவிஞர் என்னை அழைத்துச் சென்றிருந்தார். இதனால் இரு பாடல்வரிகள் இன்றும் எனக்கு நினைவில் உள்ளன.

பாழும் கயரோகம் நாட்டிற் பரவுது
பார்த்துச் சகியாதே மனிதா பார்த்துச் சகியாதே
எந்த நாளுமிதையொழிக்கத் தொண்டு செய்திட
நன்கு திரண்டு கொள்வோம்

பீ.சீ.ஜீ ஊசியை முன்குத்திக் கொண்டோரை
பின்நோயணுகாதே மனிதா பின்நோயணுகாதே
இன்று சீச்சீ யென்று வெறுத்துவிட்டாலது
தேசத்திற்கே கேடு.


இந்தப்பாடலின் இராகம் சிந்துபைரவி என்பதை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் சங்கீதத்தை ஒருபாடமாகக் கற்றபோது நான் அறிந்து கொண்டேன். கவிஞரின் பாடலின் தாக்கத்தால் "சிந்துபைரவி" இராகம் எனக்கு விருப்பமான ஒன்றாக இருந்தது. அக்காலத்தில் சிந்து பைரவி இராகத்தில் அமைந்த சில உருப்படிகளையும் எமது சங்கீத ஆசிரியர் எமக்கு சொல்லித்தந்தார்.

1990இல் எங்கள் சாமணந்தறை ஆலடிப்பிள்ளை யார் கோயிலில் சிவராத்திரி நாடகவிழாவில் "பூதத்தம்பி" இசை நாடகத்தை மேடையேற்றலாம் என எண்ணினேன். எங்கள் நாடகக் குழுவினரை அழைத்து இதனைச் சொன்னேன். மா.அழகானந்தன் அவர்கள் மிகவும் விருப்பத்தோடு "செய்வம் தம்பி" என்று எனக்கு உற்சாக மூட்டினார். நான் உட்பட வே.பாலசிங்கம் மா.அனந்த ராஜன், க.சிங்கராஜா, மா.அழகானந்தன், இ.சிவபாதம், அ.அகிலன் ஆகிய எழுவரும் ஐந்து நாள் பழக்கத்தில் துணிந்து சிவாராத்திரிக்கு மேடையேற்றினோம். முன்பு ஒரு சமயம் நான் பூதத்தம்பி நாடகக் கொப்பியைப் படித்திருந்தேன். வதிரியூர் மு.கிருஷ்ணபிள்ளை அவர்கள் எழுதிய பிரதி அது. அந்நாடகத்துக்கான இசைநாடகப் பாடல்கள் சிலவற்றை கவிஞர் மு.செல்லையா அவர்கள் எழுதியிருந்தார். ஏனையவை வழிவழியாக வந்த பாடல்கள். அப்போது எனது தந்தை உயிரோடு இல்லை. எமக்குப் பாடல்களை இராகத்துடன் சொல்லித்தருவதற்கு எவரும் இருக்கவில்லை. மா.பாலசிங்கம், மா.அழகானந் தன், க.சிங்கராஜா ஆகியோர் இந்நாடகத்தில் வேறிடங் களில் நடித்திருந்த சில கலைஞர்களிடம் சில பாடல்களைக் கேட்டறிந்தனர். முன்பு ஒரு முறை மு.கிருஷ்ணபிள்ளை அவர்களின் நாடகப்பிரதியில் படித்திருந்த சம்பவங்களை மிகுந்த சிரமத்துடன் ஞாபகத்துக்குக் கொண்டு வந்து நானே நாடகப் பிரதியை எழுதினேன். அப்போது தான் சிந்துபைரவி இராகத்தில் "மொட்டைத்தலையுடன்..." என்ற கவிஞரின் பாடலைப் படித்திருந்தமை ஞாபகத்திற்கு வந்தது.

ஆனால் பாடல் வரிகள் முழுமையாக நினைவுக்கு வர வில்லை. நினைவுக்கு வந்த வரிகளுடன் நானும் சில வரி களை எழுதி பாடலை முழுமையாக்கினேன். இராகம் சிந்து பைரவி எனப்போடப்பட்டிருந்ததாயினும் "மெட்டு" என்ன வென்று தெரியவில்லை. அப்போது சிறுவனாக இருந்தபோது நான் பாடிய கவிஞரின் கயரோகப் பாடல் மெட்டு ஞாபகத்திற்கு வந்தது. அந்த மெட்டில் "மொட்டைத் தலையுடன்..." என்ற பாடலைப் பாடிப்பார்த்தேன். சரியாக வந்தது.

பூதத்தம்பி நாடகம் பேமையேறியபோது, ஊர்வர் எல்லோருக்கும் நிறைந்த சந்தோஷம். நாம் எல்லோருமே நன்றாக நடித்திருந்தோம் நாடகமுடிவில் அரியாலை நடிகர் வி.கே இரத்தினம் உட்பட பலர் மேடைக்கு வந்து எங்களைப் பாராட்டினர். ஆ.கதிரவேல் அதிபர் அவர்களும் அவரின் மனைவி தனலக்குமி அவர்களும் எங்கள் எல்லோரையும் ஆதரவாக அரவணைத்து மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

பூதத்தம்பி நாடகம் வடமாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் மேடை ஏறியது. அவுஸ்திரேலியாவில் அங்குள்ள கலைஞர்களைப் பழக்கி மூன்று மாநிலங்களில் பூதத்தம்பி நாடகத்தை மேடையேற்றியிருக்கிறேன். எல்லா மாக அறுபது மேடைகளில் "மொட்டைத் தலையுடன்..." பாடலை நான் பாடியிருக்கிறேன். எங்கும் இந்த நாடகத்துக்கும் இப்பாடலுக்கும் மிகுந்த வரவேற்பு இருந்தது. இப்போது நினைத்துப் பார்க்கும்போதும் சிறுவனாக இருந்துபோது நான் பாடிய கவிஞரின் கயரோகப்பாடல் மெட்டே "மொட்டைத்தலையுடன்..." நாடகப்பாடலின் வெற்றிக்குக் காரணமென்றே நம்புகிறேன்.



அல்வாய் மனோகரா மாதர் சங்கம் நடாத்தும்

சிறுவர் ஆண்டு விழா.

காலம்: 25-8-79 சனிக்கிழமை இரவு 7மணிக்கு

ஆரம்பித்து வைப்பவர்: திரு. த. செல்வராசா ஆசிரியர்

நிகழ்ச்சி நிரல்:

தேவாரம்

சிறப்புச்சொற்பொழிவு:

திரு. ஆ. கதிரவேல் அதிபர் (சனசமூகநிலையத்தலைவர்)
திருமதி. தனலக்குமி கதிரவேல்
செல்வி. உமா தணிகாசலம்

கதம்ப நிகழ்ச்சிகள்:-

1. கூட்டுப்பாடல்
2. கண்ணன் நடனம்
3. பக்தமார்க்கண்டேயர்
4. கோபியர் நடனம்
5. பூஜா நடனம்
6. புரட்சிப்பெண்
7. விவாத அரங்கு.

பட்டி மன்றம்:

தலைப்பு: கம்பனின் படைப்பில் தம்பியருள் சிறந்தவன் கும்பகர்ணனு, வீபீடணனு, இலக்குமணனு.

தலைவர்: திரு. த. கலாமணி B. Sc. அவர்கள்.

பங்குபற்றுவோர்:

கும்பகர்ணன்:
1. திரு. செ. சதானந்தன் ஆசிரியர்
2. ,, வே. மகேஸ்வரன் ,,
3. ,, சசிபரஞ்சோதி அவர்கள்


இலக்குமணன்.
1. திரு. இ. இரத்தினராஜா B. Sc,
2. ,, கோ. லோகநேசன் ஆசிரியர்
3. ,, ம. சிவானந்தன். ,,

விபீடணன்
1. திரு. அ. விஜயநாதன் B. A.
2. ,, இ. விஜயரத்தினம் B. A.
3. ,, ஜோ. சத்தியநாதன் அவர்கள்.

நன்றியுரை.

அல்வாய் மனோகரா மாதர் சங்கம்.

ஜெயந்தி அச்சகம் நெல்லியடி.



அல்வாய் மனோகரா மாதர்சங்கம் நடாத்தும்

தீபாவளி விழா.

காலம்: 6-11-80 வியாழக்கிழமை இரவு 8மணி

இடம்: அல்வாய், மனோகரா சனசமூக நிலைய அருகாமை

தலைவர்: திருமதி. பர்வதாமணி வன்னியகுலம் அவர்கள்

பிரதம விருந்தினர்:

உயர்திரு. த. இராசலிங்கம் அவர்கள்
(பா. உ. உடுப்பிட்டி)

நிகழ்ச்சி நிரல்:

1. தலைமையுரை
2. பிரதம விருந்தினர் உரை
3. சிறப்புரை: திருமதி. அழகேஸ்வரி கமலநாதன்.

கலை நிகழ்ச்சிகள்:

4. கிராமிய நடனம்
5 அநுசுயா (நாடகம்)
6. வீரமுழக்கம் ,,
7. பாசத்தின் பயணம் ,,
8. இரவல் ,,
9. பத்து நூற்றாண்டுகளுக்கு முன் ,,
10. வில்லுப்பாட்டு
11. விவாத அரங்கு:

விடயம்: குடும்பப் பெண்களுக்கு உத்தியோகம் அவசியமா, அவசியமில்லையா?

| அவசியம் | அவசியமில்லை |
|---|---|
| திருமதி வள்ளிநாயகி சதானந்தன் | திருமதி திலகவதி இரத்தினசபாபதி |
| செல்வி கலைவாணி கிருஷ்ணபிள்ளை | செல்வி உமா தணிகாசலம் |
| திருமதி திரவியமலர் துரைராசா | திருமதி தனலக்குமி கதிரவேல். |

நன்றியுரை: திருமதி. பாரதி இரத்தினராசா
(மாதர் சங்க செயலாளர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அல்வாய் மனோகரா மாதர் சங்கம்.

ஜெயந்தி அச்சகம் நெல்லியடி.



# பவள விழாக் காணும் மனோகரா உதைபந்தாட்ட வீரர் மயில்வாகனம் ஜெயக்கொடி

■ கணபதிப்பிள்ளை வரதவேல்

எமது கிராமத்தின் குழாம்மைச் சேர்ந்த வல்லிக்குட்டி தெய்வானை தம்பதிகளின் மகனான மயில்வாகன் அவர்களுக்கும் இயவராந் தோட்டத்தைச் சேர்ந்த திரு, திருமதி கந்தையா தம்பதிகளின் மகளான தங்கம்மா அவர்களுக்கும் மூன்றாவது பிள்ளையாகவும் முதல் மகனாகவும் மயிலிட்டிக் குறிச்சியில் 13.08.1947ல் ஜெயக்கொடி அவர்கள் பிறந்தார். இவருக்கு மூத்த சகோதரர்களாக திருமதி வடிவேலு வனிதாமணி, திருமதி பாலசண்முகம் சரஸ்வதி ஆகியோர்களும் இளைய சகோதரர்களாக சபாமணி, வேல்மணி, தயாமணி, செல்வி சாந்தினி ஆகியோர்களும் பிறந்தார்கள், இவர்களில் வனிதாமணி, சரஸ்வதி, வேல்மணி, சாந்தினி ஆகியோர்கள் இறைவனின் பாதார விந்தங்களை சென்றடைந்து விட்டார்கள். இவரது தந்தை மயில்வாகனத்தின் சகோதரி திருமதி கணபதிப்பிள்ளை கதிராசி (முத்துக்குட்டி), தாய் தங்கம்மாவின் சகோதரிகள் திருமதி குழந்தை செல்லம்மா மற்றும் திருமதி மார்க்கண்டு பொன்னம்மா ஆகியோர்கள்.


இவர் தனது ஆரம்பக்கல்வியினை தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்றுவந்ததோடு, அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை ஆரம்பிக்கப் பட்ட பின்னர் கவிஞர் மு.செல்லையா அவர்களின் வேண்டுதலின் பிரகாரம் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் கல்வியினை மேற்கொண்டார். இடைநிலைக்கல்வியினை யா/வதிரி திரு இருதயக் கல்லூரியில்) கற்றுவந்தார். இவர் கற்றல் நடவடிக்கையோடு மட்டுமல்லாமல் இணைப்பாடவிதானமான மெய்வல்லுனர் போட்டிகளிலும், உதைபந்தாட்டம் கரப்பந்தாட்டம் ஆகியவற்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு வெற்றிவாகை சூடியவர். வடமராட்சி ஆசிரியர்கள் சங்கம் (Vadamaradchy Teacher's Association) மற்றும் பருத்தித்துறை வட்டாரத் தமிழ்ப்பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி ஆகியவற்றில் தேவரையாளி இந்துக்கல்லூரி, ஸ்ரீலங்கா வித்தியாசாலை திரு இதயக்கல்லூரி ஆகிய பாடசாலைகள் சார்பாக பங்குபற்றி வெற்றி பெற்றமைக்கான சான்றிதழ்களை இப்பவும் பேணிப்பாதுகாத்து வருகின்றார். இவர் மையில் ஓட்டம், அஞ்சல் ஓட்டம், உயரம் பாய்தல், குண்டெறிதல், பரிதி வட்டம் எறிதல் மற்றும் குறுந்தூர ஓட்டங்களிலும் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையம் நடாத்திய தீபாவளி விளையாட்டு விழாவில் மைல் ஓட்டப்போட்டியில் பங்குபற்றி முதலாம் இடத்தினைப் பெற்றுக் கொண்டார். திரு இருதயக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியிலும் கரப்பந்தாட்ட அணியிலும் இணைந்து கொண்டு தன்னை ஒரு சிறந்த விளையாட்டு வீரனாக அடையாளப்படுத்தினார். அல்வாய் மனோகரா உதைபந்தாட்ட அணியின் பின் கள வீரராக (Full back) சிறப்பாக விளையாடி எதிர் அணியினர் கோல்போடும் பல சந்தர்ப்பங்களை தடுத்து நிறுத்திய பெருமை இவரையும் சாரும். இவர் இளம் வயதில் நல்ல உடற்திடகாத்திரராகவும், துணிவுள்ளவராகவும் இருந்தமையால் பல சந்தர்ப்பங்களில் எமது ஊருக்காக அதனை வெளிப்படுத்தியிருந்தமையும்




பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின்
விளையாட்டுப் போட்டி
1959
அத்தாட்சிப் பத்திரம்.

அல்வாயூர் ஸ்ரீலங்கா பாடசாலையைச் சார்ந்த
செல்வன் / செல்வி ம. ஜெயக்கொடி
கனிட் பிரிவில் உயரம் பாய்தல் ப் போட்டியில்
முதலாம் இடம் பெற்றதற்காக வழங்கப்பெற்றது.

வித்தியாதரிசி
வட மாகாண உதவி வித்தியாதிபதி
9-6-59.


VADAMARADCHY TEACHERS' ASSOCIATION.

Annual Inter - Collegiate Athletic Meet
13th July 1967
This is to certify that
Mas. M. Jeyakody
of Sacred Heart College
obtained the THIRD Place
in High Jump Senior Boys
Achievement -

President
Organising Secretary



அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலையம்
"முத்தமிழ் மன்றப் படிப்பகம்"
19 வது ஆண்டு தீபாவளி விளையாட்டு விழா.

1. 11. 1967.

தலைவர்: திரு. அவர்கள்

இப் பத்திரம் இடம்
பெற்றமைக்கு சான்றாக வழங்கப்படுகிறது.

பிரதம தலைவர்
மன்றத் தலைவர்
செயலாளர்


SITHRA POORANAI SPORTS CLUB,
ALVAI.
Annual foot-ball Tournament.

This Certificate of Merit is awarded to
Mr. M. Jeyakoddy
of Alvai Manohara Sports Club for being the best
full back in the whole tournament.

Secretary
Potron
President

Date 25.12.69
Kalapavanam Press - Viyaparimoolai

குறிப்பிட்டுச் சொல்லக்கூடியதாகும்.

15.06.1972ல் அரச நியமனம் பெற்று சுகாதார சேவையில் ஊழியராக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலும், பருத்தித்துறை ஆதாரவைத்திய சாலையிலும் கடமையாற்றி 01.01.1991ல் அரச பதவியிலிருந்து ஓய்வு பெற்றதுடன் தமது குடும்ப வருமானத்தை மேலும் உயர்வடையச் செய்வதற்காக பாதணி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு கொழும்பு, நீர்கொழும்பு ஆகிய பிரதேசங்களில் பாதணி உற்பத்தித் தொழிலினை மேற்கொண்டிருந்தார். பிற்காலத்தில் வதிரி, தேவரையாளி, அல்வாய்க் கிராமங்களிலும் பாதணி உற்பத்தித் தொழிலினை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்க தாகும். எமது கிராமத்தின் பிச்சந்தோட்டத்தைச் சேர்ந்த செல்லக்குட்டி இரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியான லீலாவதி அவர்களை 24.06.1971ல் இல்லற வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு ஜெயக்காந்தன், காண்டீபன், வித்தியா, சுகன்யா, சிந்துயா ஆகிய ஐந்து மக்கட் செல்வங்களைப் பெற்று குடும்பத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருவதுடன் "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பதற்கமைவாக மகன் காண்டீபனையும் திருணபந்தத் தினூடாக மகள் வித்தியாவையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்ததோடு மகள் சுகன்யாவையும் ஆசிரியையாக்கி இன்புற்றிருந்ததுடன் பிள்ளைகள் எல்லோருக்கும் திருமணம் செய்து வைத்ததுடன் கஸ்தூரி, பிரபாஸினி, நிவேதனன், றுபேஷ், மயூரதன் ஆகியோர்களை மருமக்களாகப் பெற்று புளகாங்கிதம் கொண்டதுன் நிவே ஆதவன், நிவே இலக்கியா, திருமாறன், லக்சிகன், தர்ணி, ஹர்ஷ்னி, ஹனுஷ்ரீ ஆகிய பேரப்பிள்ளைகளையும் கண்டு குடும்பத்தில் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார்.

அல்வாய் சாமாணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயிலின் ஐந்தாம் திருவிழாத் தலைவராக இவரது தந்த மயில்வாகனம் இருந்ததோடு இவர் ஐந்தாம் திருவிழாவின் உபயகாரரில் ஒருவராக இருந்து வருகின்றார். எமது கிராமத்தின் காத்தவராயர் ஆலயத்தில் திருவெம்பாவைப் பூஜைகள் நடைபெற்று திருவாதிரைக்கு அடுத்தநாள் (பதினோராம் நாள்) இவரது தந்தையார் மிகவும் சிறப்பான முறையில் அவ்விழாவினைச் செய்து வந்தார். இப்போது வரசித்தி உடனுறை காத்தவராயர் ஆலயத்தின் அலங்கார உற்சவத்தின் ஒன்பதாம் நாளாகிய தேர்த்திருவிழாவினை இவரது தலைமையில் இவரது குடும்பங்கள் சேர்ந்து செய்து வருகின்றார்கள். எமது கிராமத்தின் பொது நிறுவனங்கள் மற்றும் எமது ஆலயத்தின் அபிவிருத்திகளில் இவர்களது குடும்பத்தின் வகிபாகம் மிகவும் காத்திரமாக அமைகின்றது.

எமது கிராமத்தின் ஆவணமான நாங்கள் பத்திரிகையில் மயில்வாகனம் ஜெயக்கொடி அவர்களைப் பற்றிய பதிவினை மேற்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.



# உழைப்பால் உயர்ந்த மனிதர் அமரர் பொ. மகாலிங்கம்

■ வெற்றி துஷ்யந்தன்



மிக நல்ல கடும் உழைப்பாளிகள் நிறைந்த பெருமைமிகு எமது கிராமத்தில் தன்னுடைய சீரிய உழைப்பினால் உயர்ந்து இன்றைக்கும் பெயர்சொல்லும் ஒருவராக மிளிர்பவர் அமரர் மகாலிங்கம் ஆவார். எமது கிராமத்தில் ஏழு சகோதரர்களுடன் பிறந்து சீவல் தொழிலை பிரதானமான தொழிலாக கொண்டு தன் உழைப்பின் மூலம் உயர்ந்தார்.

இவருடைய தந்தையார் வெடி வியாபாரம் செய்த்து வந்தவராக இருந்து இறுதியில் அந்த வெடி வெடித்தே மரணமும் ஆனார். அல்வாயை சேர்ந்த தங்கம்மாவை திருமணம் முடித்து சத்தியலிங்கம், தீபஜோதி, பொன்தலன், செல்வேஸ்வரன் ஆகியோர்களை பிள்ளைகளாக பெற்று மகிழ்ந்தார். தன்னுடைய தனிமனித உழைப்பினால் அன்றைய நாளிலேயே தனது வீட்டு வளவுக்குள் தமக்கென்றொரு வெட்டுக்கிணறை யும் அமைத்து மகிழ்ந்தார்.

இன்றும் அழகுற காணப்படும் இக்கிணறு அன்றைய நாளில் பலரின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்த கிணறாக இருந்தது. கிணறு, சொந்த வீடு, காணி வளவுகள் என்று தனது கடும் உழைப்பினால் தன் சந்ததியை எண்ணி எதிர்காலம் கருதி எல்லாவற்றையும் அமைத்து நல் மனிதராக திகழ்ந்தார்.

இன்று அட்டரந்தை பகுதியில் மிக அழகாக மிளிர்ந்து நிற்கும் இளம்பிறை சன சமூக நிலையம் அமைந்துள்ள தனது காணியில் அன்றைய நாளில் எமது ஆலடியான் திருவாதிரை ஊர்வலத்தின் போது மிகப்பெரிய பந்தலினை அமைத்து அதன் முன் சாமியை நிறுத்தி மோதகம், வடை, பொங்கல் என பெரிய படையல் ஒன்றினை வருடா வருடம் அமைத்து இன்புற்றவர் இவர் ஆவார்.

பின்னாளில் அந்தக் காணியினை இளம்பிறை சனசமூக நிலையத்திற்காய் உவந்தளித்துமிருந்தார். சொந்த காணிகள் பலவற்றை தன் உழைப்பினால் வாங்கி தன்னகத்தே கொண்டிருந்த இவரின் சிந்தனை செயல்திறனை இன்றைய நாளில் சமூக நலன்கருதி அவரது மகன்கள் பொன் தலன் மற்றும் குறிப்பாக இளைய மகன் செல்வேஸ்வரன் ஆகியோர் எமது ஆலயத்திற்கென்றும், சிறுதொகையை பெற்று எமது மைதானத்திற்காகவும் மனமுவந்து வழங்கியமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

எமது ஆலயத்தின் பின் வீதியில் அன்றைய நாளில் மின் பிறப்பாக்கி ஒன்றினை அமைக்க வேண்டுமென்ற நிலை உருவான போது தன்னுடைய சொந்த காணியின் ஒரு துண்டு காணியை பொது நலம் சார்ந்து உடனடியாக வழங்கிய பெருமையும் இவரையே சாரும். எமது கிராம அனைத்து நிறுவனங்களினதும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தன்னாலான பங்களிப்புக்களையும், வீதங்களையும் வழங்கி வந்த ஒருவராகவும் இவர் வாழ்ந்தார். காணிகள், வளவுகள் என்று ஒரு காலத்தில் நிறைய தன் சம்பாதிப்பின் மூலம் உருவாக்கிய ஒருவராக இருந்தாலும் தன்னுடைய ஈகை குணத்தை பிள்ளைகளுக்கும் வழங்கி இன்று அவருடைய மகன் செல்வேஸ்வரனின் காலத்தில் அவை எமது நிறுவனங்களுக்கு வழங்கப் பட்டுள்ளமை அவரின் காத்திரமான வாழ்விற்கான அடிநாதம் என்றே சொல்லவேண்டும்.

நல்லதொரு உழைப்பாளனாய், குடும்பஸ்தனாய் வாழ்ந்து தான் சார்ந்த கிராமத்திற்காய் பல பணிகளை செய்த இவர் என்றைக்கும் எமது கிராம வரலாற்றில் நிலை பெறுவார்.

நன்றி - தகவலும் தரவுகளும் - மா .செல்லத்தம்பி

எம்மவர்கள் சிறுகதை - 5

# பேதம்

■ சி.விமலன்

இரண்டு கிழமைக்கு முன்னதாகவே நான் பணிபுரியும் தனியார் நிறுவனத்தில் பியோனாக வேலை செய்யும் நந்தகுமாரன் அந்த விசயத்தை என்னிடம் முதலில் சொன்னபோது அவனது பொருளாதார வளம் இதற்கு கைகொடுக்குமா? என்ற சந்தேகம் வந்ததே தவிர அந்தச் சடங்கு நிகழ்வு எனக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ண வில்லை. ஆனாலும் அந்தச் சடங்கு சம்பிர தாயங்கள் அவசியந்தானா? என்பது குறித்த வாதப் பிரதிவாதங்களை நான் நீண்ட நாட்களாகவே அறிந்து வந்திருக்கிறேன்.

விடயம் வேறொன்றுமில்லை. நந்தகுமாரன் தனது மூன்றாவது மகளின் பூப்புனித நீராட்டு விழாவை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கு அழைப்பிதழ் ஒன்றை வடிவமைத்து தர வேண்டும் என்பதே அதுவாகும்.

நந்தகுமாரன் மட்டுமல்ல என்னோடு பணி புரியும் அத்தனை ஊழியர்களும் நிறுவனத்தில் பணி புரியும் சக ஊழியர்களுக்கோ அல்லது அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கோ ஏதாவது நன்மை, தீமை ஏற்பட்டால் திருமண அழைப்பிதழையோ அஞ்சலி பிரசுரத்தையோ எழுதி வடிவமைக்கும் பொறுப்பை என்னிடம் தந்து விடுவார்கள். வேலை தவிர்ந்த நேரங்களில் கதைப்புத்தகமும் கவிதைப் புத்தகமாகவும் நான் இருப்பதும் பத்திரிகை, சஞ்சிகைகளில் அவ்வப் போது நான் எழுதி வரும் கவிதை, சிறுகதைகள் குறித்து அவர்கள் அறிந்து வைத்திருப்பதால் ஏற்பட்ட விளைவு இது.

ஆரம்பத்தில் நிர்வாகக் கிளையில் பணியாற்றிய பொழுது ஓய்வு நேரங்களில் அவர்கள் கேட்டதற் கிணங்க எழுதுவதில் எனக்கு எந்தத் தடையும் இருந்த தில்லை. அவர்கள் என்னை கோயில் மேளமாய் ஆக்கி விட்டார்களோ என அங்கலாய்த்தாலும் நான் மறுப் பேதும் தெரிவிப்பதில்லை.

ஆனால் மூன்று மாத காலத்திற்கு முன்னர் கணக்கு கிளையில் வேலை செய்த அன்பழகன் வேலையை விட்டு சென்ற பொழுது நிர்வாகக் கிளை யில் இருந்த என்னை கணக்கு கிளைக்கு மாற்றி விட்டார்கள். அன்றில் இருந்து நிறுவனத்தில் ஒய்வு கிடைப்பதென்பதே குதிரைக் கொம்பாகி விட்டது. கணக்கு கிளை வேலைகளை அரிச்சுவடியில் இருந்து நான் பழகவேண்டி இருந்த காரணத்தினால் என்னை யாரும் எழுதித்தருமாறு கேட்கும் பொழுது "இருக்கிற வேலையில நீங்கள் வேற ஒரு புறம்" என ஒரிரு சந்தர்ப்பங்களில் அவர்களை கடிந்து கொண்டும் இருக்கிறேன். இதனால் நான் "முகம் பார்த்து தான் உதவி செய்வேன்" என்ற அவப்பெயரையும் சம்பாதிக்க வேண்டியதாயிற்று. தினமும் அவர்கள் முகத்தில் முழிக்க வேண்டியிருப்பதால் தவிர்க்க முடியாத நிகழ்வென்றால் வீட்டில் "இருந்தே எழுதிக்கொண்டும் சென்றிருக்கிறேன்.

நந்தகுமாரன் நிறுவனத்தில் எந்தவொரு ஊழியருடனும் முரண்பட்டதை நான்காணவில்லை. நிறுவனப் பணிகளுக்கும் அப்பால் அவன் மதிய உணவு கடையில் வாங்கித்தருவது, எனது தனிப்பட்ட கடிதங்களை தபாலில் சேர்ப்பது, வங்கியில் பணம் கட்டுவது போன்ற எந்தவிதமான வேலைகளாயினும் முகம் கோணாது "எழுத்தாளருக்கு செய்யாமல் வேற யாருக்கு செய்வன்" என்று சிறிது நகைச்சுவையாகக் கூறி நான் சொன்ன அத்தனை வேலைகளையும் பக்காவா முடித்து தருவான். ஆனாலும் பிரதியுபகாரமாய் என்னிடம் எந்த உதவியையும் அவன் கேட்பதில்லை. அதனால் நந்தகுமாரன் இன்று என்னை உதவி கேட்டபொழுது மறுக்கமுடியாது போய்விட்டது. அவன் செய்யும் சின்னச் சின்ன உதவிகளுக்கான நன்றிக் கடனாக ஆவது இதனை முடித்துக் கொடுக்கவேண்டும் என்று மனம் சொல்லியது. எனது அதிஸ்டம் கணக்காளர் அன்றைய தினம் தூரத்து சொந்தமான ஒருவரின் திருமண நிகழ்வுக்கு அரைநாள் விடுமுறையில் சென்றது வசதியாகி விட்டது.

நான் கதிரையில் இருந்து கொண்டே பக்கத்தில் நந்தகுமாரனையும் இருத்திக்கொண்டு அழைப்பிதழுக் குத் தேவையான அத்தனை விபரங்களையும் ஒரு வெற்றுத் தாளில் குறிப்பாக எடுத்துக்கொண்டேன்.

நந்தகுமாரன் அப்பால் சென்றதும் எனது இருக்கைக்கு பக்கத்து இருக்கையில் இருந்த ரதன் கேட்டான்

"என்னடா மச்சான் நந்தகுமாரன்ர பெட்டைக்கு தண்ணிவார்வையோ?"

"ஓமடா.."

"எப்ப நாள் எடுத்திருக்கிறார்?"

"வாற இருபத்தைந்தாம் திகதியடா"

"அப்ப இந்த மாசம் இன்னொரு அநியாயச் செலவு. வீட்டுக்கு அனுப்பவே காசில்லை. அதுக்குள்ள இதுகள் வேற. ஒரு பெட்டைக்கு தண்ணிவார்வை வைச்சா காணாதோ? ஒவ்வொரு பெட்டைக்கும் என்ன கோதாரிக்கடா வைக்கிறாங்கள். பணம் சம்பாதிக் கிறதுக்கு இதுவும் ஒரு வழியாப் போச்சு" எண்டு பொரிந்து தள்ளினான் ரதன்.

"உனக்கென்ன நீ இப்ப தனிக்கட்டை இனி

கல்யாணம், குடும்பம் எண்டு வரைக்குள்ள தான் அதெல்லாம் விளங்கும்” என்றேன் நான்.

“அப்படி நான் கல்யாணம் கட்டினாலும் என்ர பெட்டையளுக்கு நான் தண்ணி வார்வை வைக்க மாட்டன். அந்தக் காலத்தில பெம்பிளையள் வீட்டைத் தாண்டி வராத சூழலில எங்கட வீட்டிலும் ஒரு குமர் இருக்கு தெண்டு காட்டுறதுக்கு இந்த சடங்கு சம்பிரதாயங்கள் எல்லாம் நடந்தது. இந்தக்காலத்தில இது அவசியந்தானோ?” என்று கோபம் குறையாதவனா கவே கேட்டான் ரதன்.

ரதனது கோபத்திற்கு காரணம் இதுதான். யாழ்ப்பாணத்தை சொந்த இடமாக கொண்ட ரதன் திருகோணமலைக்கு வேலைநிமித்தம் இந்த தனியார் நிறுவனத்தில் சேர்ந்து மூன்று வருடங்களாகின்றன. வீட்டு வாடகை, கரண்ட் பில், தண்ணி பில் , சாப்பாட்டு செலவு போக மிச்சத்தை யாழ்ப்பாணத்தில் அவனின் சம்பளத்தை எதிர்பார்த்து காத்திருக்கும் பெற்றோருக் கும் இரண்டு சகோதரிகளுக்கும் அனுப்புவதில் அவன் என்றும் தவறுவதில்லை.

வழமையாக சக ஊழியர்களது திருமணம், செத்தவீடு, பிரிவுபசார விழா போன்ற நிகழ்வுக்காக நலன்புரிச் சங்கம் என்ற பெயரில் மாதா மாதம் நூறு ரூபா சம்பளத்தில் இருந்து கழிக்கப்படுவது வழக்கம். அது தவிர சில வேளைகளில் இவ்வாறான நிகழ்வின் போது முன்னூறு, ஐந்நூறு என வழங்குவதும் தவிர்க்க முடியாததாகவே இருந்தது. எமது நிறுவனத்தில் மொத்தம் பன்னிரண்டு பேர் உள்ளமையும் இதற்கொரு காரணம். இது பெரும்பாலான நிறுவனங்களில் நடை பெறு கின்ற வாடிக்கையான ஒன்றுதான். கிடைத்த பணத்தைக் கொண்டு ஏதாவது பரிசுப் பொருளை வாங்கி அதன் மேலே அன்பளிப்பு செய்தோர் விபரமும் தொகையும் அதில் ஒட்டப்பட்டு உரிய நிகழ்ச்சிகளில் கையளிக்கப் படும்.

ஆனாலும் இந்த மாதம் நிர்வாக உத்தி யோகத்தரின் மகளின் கல்யாணம், கணக்காளரது மகன் அக்சிடன்றிபட்டு வைத்தியசாலையில் இருந்தபொழுது பார்க்கச் சென்றமை என்பனவற்றுக்கும் ஒரு தொகை பணம் வழங்கப்பட்டுள்ள நிலையில் நந்தகுமாரனின் மகளது தண்ணிவார்வை மூன்றாவது செலவாகி விட்டது. இவையெல்லாம் மனிதாபிமான அடிப்படை யில் தவிர்க்க முடியாத செலவுகளே. அக்சிடன் ரோ, செத்தவீடோ திட்டமிட்டு நடைபெறுவதில்லையே. இவை அனைத்தும் சேர்ந்ததுதானே வாழ்க்கை என்ற புரிதல் கூடவா மனிதர்களுக்கு இல்லாமல் போய் விட்டது என்று நான் நினைப்பதுண்டு.

அன்றைய தினம் இரவே அழைப்பிதழை நந்தகுமாரன் சொன்னது போலவே வடிவமைத்து சிடியில் றைற் பணிணிவிட்டேன். மறுநாள் நிறுவனத் திற்கு அதனை கொண்டு சென்று அவரிடம் காண்பித்து அச்சகத்தில் கொடுத்து விடுமாறு சொன்னேன். அதன் பின்னர் கணக்குப் பேரேடுகளை சரிபார்ப்பதிலேயே நான் மூழ்கி விட்டேன்.

இரண்டு நாட்களின் பின்பு அழைப்பிதழோடு வந்த நந்தகுமாரன் அதனை நிர்வாக உத்தியோகத் தரிடம் கொடுத்து விட்டான். ஒரு கவறிங் லெட்டருடன் அழைப்பிதழை சக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் காட்டும் முயற்சியில் இறங்கினார் அவர்.

வழமையாக அவ்வாறான சந்தர்ப்பங்களில் அழைப்பிதழுடன் கவறிங் லெட்டரும் அடித்து இணைக் கப்பட்டு ஒவ்வொரு உத்தியோகத்தரது பார்வைக்கும் அனுப்பி வைக்கப்படும். அவர்கள் பார்த்ததற்கு அடை யாளமாக ஒவ்வொருவரும் தங்களது கையெழுத்தினை யும் தங்களால் இயன்ற ஒரு தொகைப் பணத்தினையும் அதில் குறிப்பிட்டுக் கொள்வார்கள். பெரும் பாலான சந்தர்ப்பங்களில் அழைப்பிதழை பார்த்த வுடனேயே பணத்தினையும் தந்துவிடுவார்கள். எல்லாவற்றையும் சேர்த்து பரிசுப் பொருள் வாங்குவது நிர்வாக உத்தி யோகத்தரின் கடமையாக இருந்தது.

நாட்கள் நகர்ந்தன. பூப்புனித நீராட்டு விழா இருபத்தைந்தாம் திகதி சனிக்கிழமை வருவதால் நந்த குமாரன் புதன்கிழமையே விடுமுறை எடுத்துக்கொண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று விட்டார்.

அழைப்பிதழ் யாவரது பார்வைக்கும் அனுப்பப் பட்ட நிலையிலும் வெள்ளிக்கிழமை வரை எவருமே பணம் வழங்க முன் வரவில்லை. எல்லோரும் திருகோண மலையில் இருந்து நிகழ்வுக்காக யாழ்ப்பாணம் செல்ல முடியாது என்பதால் வாராவாரம் யாழ்ப்பாணம் செல்லும் எமது நிறுவனத்தின் விளம்பரப் பிரிவில் கடமையாற்றும் ராகவனிடம் கிடைக்கும் பணத்தை ஒப்படைத்து விடலாம் என்று அன்று காலையிலேயே நான் ஒரு எண்ணத்தைக் கூறினேன்.

அது குறித்து எவருமே அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. அந்த விடயத்தை தட்டிக்கழிப்பதை என்னால் உணரக்கூடியதாக இருந்தது.

போதாக்குறைக்கு ரதன் “நீ நந்தகுமாரனுக்கு நல்லாவே வக்காளத்து வாங்கிறாய்” என என்னைப் பார்த்து கூறியது எனக்கு கடுப்பை உண்டு பண்ணியது. இதற்கு மேலும் இது குறித்து பேசி பிரயோசனம் இல்லையெனத் தோன்றியது.

பூப்புனித நீராட்டு விழா முடிந்து அடுத்த திங்கட் கிழமை அலுவலகத்திற்கு வருகை தந்த நந்த குமாரன் நிகழ்வு குறித்தோ நிகழ்வுக்கு வராதது குறித்தோ எந்தவிதமான கருத்தும் சொல்லாமல் தனது வேலையை செய்து கொண்டி ருந்தார். எனக்கு அவரைப் பார்ப்பதற்கே சங்கடமாய் இருந்தது. நடந்த உண்மையை அவரிடம் சொல்வதா? வேண்டாமா? என்று மனம் தத்தளித்தது. உண்மையை சொன்னால் ஒரு வகையில் அது மற்ற ஊழியர்களை பற்றி புறஞ்சொல்வதாகவே எனக்குப் பட்டது.

“நந்தகுமாரன் அண்ணே! வீட்டுக்கு வரவில்லை எண்டு குறைநினையாதையுங்கோ, வராத எங்களுக் கெல்லாம் பார்ட்டி கிடையாதோ?” என ரதன் எதுவுமே நடக்காதது போல கேட்டான்.

“அப்படி நான் ஒண்டும் சொல்லவில்லையே” எண்டு கூறிய நந்தகுமாரன் ஒரு சிரிப்பை முகத்தில் வலிந்து உதிர்த்து விட்டு சிற்றுண்டிகளை வாங்குவதற் காக கன்ரீன் நோக்கி சென்று கொண்டிருந்தான் .

எனக்கு அந்தச்சிரிப்பு “என்ன இருந்தாலும் நான் ஒரு பியோன் தானே” என்ற எண்ணத்தை வெளிப்படுத்து வதாகவே தோன்றியது. காலையில் வந்த உடனேயே அவரிடம் சென்று நிகழ்வுக்கு வராததற்கு மன்னிப்பை கோரி இருக்கலாமோ என்ற குற்ற உணர்வு இப்போது என்னை ஆட்கொள்ளத் தொடங்கியது.